**விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**
**(ஏப்ரல் 18-ம் தேதி முதல் ஏப்ரல் 22-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மைய ம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**
**முந்தைய வார வானிலை (13.04.2018 -16.04.2018)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 30.7 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34-38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 23-26 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 6-7 |
| ஒப்புஈரப்பதம் (சதவீதம்) (07:00 LMT) | 63-86 |
| ஒப்புஈரப்பதம் (சதவீதம்) (14:00 LMT) | 47-86 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 5-13 |
| காற்றின் திசை (டிகிரி) | 90-360 |

**22.04.2018 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| **வானிலை காரணிகள்** | **வானிலை முன்னறிவிப்பு** | | | | |
|---|---|---|---|---|---|
| | **நாள் 1 18.04.2018** | **நாள் 2 19.04.2018** | **நாள் 3 20.04.2018** | **நாள் 4 21.04.2018** | **நாள் 5 22.04.2018** |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 1 | 2 | 1 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 36 | 36 | 38 | 38 | 38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 26 | 27 | 27 | 27 |
| வானம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 60-68 | 60-68 | 60-70 | 60-70 | 60-70 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | **8**/ தெற்கு | **8**/ தெற்கு | **5**/ தெற்கு | **5**/ தெற்கு | **5**/ தெற்கு |

**வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமானது முதல் அதிகமான மேகமூட்டம், மிக இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்**

| **பயிர் / சாகுபடி சூழல்** | **பருவம் / சாகுபடி செயல்கள்** | **வேளாண் வானிலை ஆலோசனை** |
|---|---|---|
| மிளகாய் | பூக்கும் பருவம் முதல் காய் பிடிக்கும் பருவம் | • மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க வேலையாட்கள் மூலம் சுரண்டி விடலாம் மற்றும் பயிர் கழிவுகளை பயிர்களுக்கு இடையில் பரப்பவும்.<br>• தற்பொழுது நிலவும் வானிலையில், பழ அழுகல் நோய் மற்றும் நுனி கருகல் நோய் காணப்படுகிறது. இந்நோயைக்கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோரைடு **0.25** சதம் மற்றும் சினெப் **0.15** சதம் |

| | | |
|---|---|---|
| | | தெளிக்கவும். இதனால் பழத்தின் மகசூல் அதிகரிக்கும்.<br>• மிளகாயில் இலைப்பேனின் தாக்குதலை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட செடிகளின் இலைகள் சுருக்கங்களுடன் மேல் நோக்கி சுருண்டு காணப்படும். இலைக்காம்பு நீண்டு இருக்கும். இப்பூச்சியை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8% SL @ 3 மி.லி./ 10 லிட்டர் தண்ணீர் அல்லது டைமெத்தோயேட் 30% EC @ 1.0 கி/ லி என்ற அளவில் தெளிக்கவும். |
| வெப்பம் | பயிர் | • பயிர் கழிவுகளை பயிர்களுக்கு இடையில் பரப்பி மண்ணின் ஈரப்பதத்தை தக்கவைத்து கொள்ளவும். |
| | கால்நடை | • வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக வெப்பநிலையின் தாக்கத்தை குறைக்க கால்நடைகளுக்கு குளிர்ந்த நீர் மற்றும் பசுந்தீவனங்களை போதிய அளவு அளிக்கவும். கொட்டகையை சுற்றிலும் கோணிப்பைகளை கட்டி நீரை தெளித்து அதிக வெப்பநிலையின் தாக்கத்தை மட்டுப்படுத்தவும்.<br>• இவ்வானிலையில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்காவண்ணம் பாதுகாக்க அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசியை போடவேண்டும். |
| மழை | கோடை உழவு | • கோடை மாதங்களில் எதர்பாராத மழைப்பொழிவு மூலம் மண்ணின் ஊடுருவல் மேம்படுத்தவும் களை வளர்ச்சியை கட்டுப்படுத்தவும் கோடை உழவு முறை செயல்படுத்தவும். |
| | பசுந்தாள் உரபயிர் | • கோடை மாதங்களில் வரும் மழை பயன்படுத்தி பசுந்தாள் உரபயிர்களை பயிரிடலாம் |

குறுஞ்செய்தி-:

மழை: 20,21&22.4.18: 1,2&1மி.மீ. கால்நடை-வெப்பதாக்குதல்- குறைக்க குளிர்ந்த நீர்& பசுந்தீவனங்கள் அளிக்கவும். கொட்டகையை சுற்றிலும் கோணிப்பைகளை கட்டி நீரை தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி